என்பது தெரிகிறது. இது நீதித் துறை பற்றி வருகிறது என்பது மாதிரி சொல்ல வருகிறீர்கள். அது அப்படி அல்ல. இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படியே சொல்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மடங்கு என்று சொல்லுகிறார். மடங்கு என்றால், பர்சன்டேஜைத்தான் அவர் அப்படிச் சொல்லுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பர்சன்டேஜைத்தான் மாண்புமிகு அமைச்சர் அப்படிச் சொல்லுகிறார். (குறுக்கீடு) திரு. லட்சுமணன், கேள்வி நேரத்திலே அப்படியெல்லாம் கிளாரிபிகேஷன் கேட்க முடியாது. கேள்வி நேரத்திலே உங்களுக்கு கிளாரிபிகேஷன் தேவைப்பட்டால் எழுத்து மூலமாகக் கொடுத்து, இன்னொரு நேரத்தில் ஒரு விவாதத்திற்கு வேண்டுமானால் நீங்கள் நேரம் கேட்கலாம். திரு. லட்சுமணன் உட்காருங்கள்.

வினா எண் 107, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

107--

சோலைக்காடு ஏரிக்குப் பாசன நீர்

***20297--திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சோலைக்காடு பெரிய ஏரிக்கு பட்டங்காடு சி.எம்.பி. வாய்க்காலிலிருந்து தண்ணீர் பாசனத்திற்குவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: தலைவர் அவர்களே,

பேராவூரணி தொகுதி, சோலைக்காடு பெரிய ஏரிக்குப் பட்டக்காடு காவேரி-மேட்டூர் ப்ராஜக்ட் வாய்க்கால் மூலம், சி.எம்.பி. வாய்க்கால் மூலம் பாசனத்திற்கு முறை வைத்துத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது பயிர்களுக்கு.

1996 பிப்ரவரி 23]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னது போல் மிகவும் சோதனையான நேரத்தில் மேட்டூரிலே தண்ணீர் இல்லாத நேரத்திலும், நடுவர் மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் டெல்லியிலே போராடியும்கூட நமக்கு இரண்டரை டி.எம்.சி., தண்ணீர் கொடுத்த நேரத்தில் அந்தத் தண்ணீரை முழுமையாக நாம் கொடுத்து ஓரளவு அந்தப் பகுதியிலே பயிரைக் காப்பாற்றியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தப் பட்டங்காடு, சோலைக்காடு பகுதி என்பது கடைமடைப்பகுதி. அந்த வாய்க்காலின் வழியாக 4 ஊர்களுக்கு ஏரிகளுக்குத் தண்ணீர் போக வேண்டும். ஒன்று, பட்டங்காடு. இன்னொன்று சோலைக்காடு. இன்னொன்று செந்தரவேல். இந்த நான்கு ஊர்களுக்கும் தண்ணீர் போய்ச் சேருவதில் சிறிய வாய்க்கால் என்பதால் மிகவும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நான்கு ஊர்களுக்கும் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவரிடத்தில் தொலைபேசி மூலம் பலமுறை சொல்லி அவர்கள் போன் செய்து தண்ணீரைக் கொடுத்தார்கள். ஆனால் கடைசியாக ஒரு முறை தண்ணீர் கொடுத்தால் அதைக் காப்பாற்றியிருக்க முடியும். கடைசியில் கொடுப்பதற்குத் தண்ணீர் மேட்டூரிலும் இல்லை, கல்லணையிலும் தண்ணீர் இல்லை. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்தில் கேட்டேன். ஆனால் முடியவில்லை. இயற்கை நம்மைச் சதி செய்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் பட்டங்காடு பற்றிக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: ஆகவே, இந்த வாய்க்காலை அகலப்படுத்தி, விரிவுபடுத்திக் கொடுத்தால் நல்லது. இந்த நான்கு கிராமங்களுக்கும் போட்டி, எங்கள் வாய்க்காலுக்குத் தண்ணீர் வரவில்லை, எங்கள் வாய்க்காலுக்குத் தண்ணீர் வரவில்லை என்ற போட்டி ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல்வேறு உதவிகளை நிரம்பச் செய்திருந்தாலும்கூட, இந்தப் பட்டங்காடு, சோலைக்காடு கூத்தாடிவயல் ஆதிதிராவிடர் குளம், செந்தரவேல் ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு இந்த வாய்க்காலைச் சீர் செய்து அதற்கு ஸ்பெஷல் அட்டென்ஷன் கொடுத்து, விசேஷ அதிகாரி

மூலமாகப் பார்வையிட்டு, அதைச் சீர் செய்து அந்தக் கிராமங்களுக்குள் போட்டி ஏற்படாத அளவிற்குச் செய்வதற்கு முயற்சிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, பேராவூரணி தொகுதி சோலைக்காடு கிராமத்தில் உள்ள பெரிய ஏரி சி.எம்.பி. பாசன ஏரிக்குள் இருக்கின்ற பாசனத்திற்கு உட்பட்ட ஏரியாகும். இதற்கு 413 ஏக்கர் ஆயக்கட்டு இருக்கிறது. அவர் சொல்லுகின்ற அந்தச் சோலைக்காடு பெரிய ஏரிக்கு அம்மன் சத்திரம் வாய்க்காலிலிருந்து மதகு எண். 36-இன் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வ்ருகிறது. அந்தக் கால்வாய்களைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். அதுசம்பந்தமாக, நான்கு கிராமங்களுக்கும் பிரச்சினை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பாசன வசதி கொடுப்பதிலே ஏதாவது பிரச்சினை இருக்குமானால்-தண்ணீர் கொண்டு செல்வதற்கு அந்தக் கால்வாயின் அளவு பெரிதாக இல்லை என்று இங்கே தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் அரசு அதைப் பரிவோடு கவனித்து, பரிசீலித்து, இதுசம்பந்தமாக அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதத்திலே செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, விசேஷமாகத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தப் பட்டங்காட்டிலிருந்து 4 இடங்களுக்குப் பிரிய வேண்டியிருக்கிறது. இந்த சோலைக்காட்டிற்குத் தண்ணீர் விட பட்டங்காட்டு மக்கள் மறுக்கிறார்கள். அதனால் சோலைக்காட்டு ஏரிக்குத் தண்ணீர்ப் போய் சேரவில்லை. அதுபோல, ஆதிதிராவிட மக்களுடைய கூத்தாடிவயல் ஏரிக்கும் தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை. செந்தரவேலுக்கும் தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை. இந்தப் பட்டங்காட்டிற்கும் தண்ணீர் பாயவில்லை. ஆக 4 ஊர்களும் இன்று பட்டுப் போய் விட்டன என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் 4 முறை, 5 முறை போன் செய்து அந்தக் கிராமத்திற்குத் தண்ணீர் விடுங்கள், தண்ணீர் விடுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் தண்ணீர்விட முயற்சித்தார்கள். ஆனால் போய்ச் சேர முடியவில்லை. காரணம், டெய்ல் என்ட் பகுதி. ஆகவேதான் இதில் விசேஷமாகக் கவனம் செலுத்தி நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைக்போல, எதையும் உடனடியாகச்

1996 பிப்ரவரி 23]

செய்யக்கூடிய ஆற்றல் படைத்த நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இதை விரைந்து செய்து, இனிமேலாவது, வருங்காலத்தில் இதில் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஏற்பாடு செய்வாரா? மேலும் இந்தக் கிராமத்தில் மட்டும் அல்லாமல், பேராவூரணி, பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம் அத்தனைக்கும் இன்னும் ஒரு டி.எம்.சி. தண்ணீர் இருந்தால் நிச்சயமாக கடைமடைப் பகுதியில் உள்ள பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்ற நிலையிருக்கிறது. சென்ற ஆண்டும், அதற்கு முதல் ஆண்டிலும் நான் விசேஷ வாட்டர் கேட்கின்றபொழுது நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் நம்முடைய தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தண்ணீர் கொடுத்து பயிரைக் காப்பாற்றினார்கள். அதுபோல இந்த நேரத்தில் மேட்டூரிலே தண்ணீர் இல்லை என்றாலும், இதைக் கனிவோடு பரிசீலனை செய்து ஒரு டி.எம்.சி தண்ணீரை மட்டும் கொடுத்தால் இந்தக் கடைமடைப் பகுதி மக்களைக் காப்பாற்றிவிட முடியும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இருந்த நிலைமை வேறு. இந்த ஆண்டு இருக்கின்ற நிலைமை வேறு. இருக்கின்ற தண்ணீரை வைத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போராடிப் பெற்ற இந்த *6* டி.எம்.சி. தண்ணீரோடு சேர்த்து அந்தப் பகுதிகளுக்கு எந்த அளவிற்குச் சீராக விநியோகம் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு புகார்கள் இல்லாமல் அனைத்து தரப்பு விவசாயிகளையும் திருப்திபடுத்துகின்ற விதத்திலே தண்ணீர் பங்கீடு செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். பொதுவாக அந்த 'டெயில் என்ட்' கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்கிறபோது எப்போதுமே பிரச்சினை ஏற்படுகிறது. தண்ணீர் அதிகமாக இருக்கின்ற காலங்களிலே அதை நாம் சீராகச் செய்ய முடிகிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள காலங்களிலே இதுபோன்ற பிரச்சினைகள் வந்துவிடுகின்றன. கிராமங்களுக்குள்ளே ஏற்படுகின்ற பிரச்சினைகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்படுகின்ற பிரச்சினைகளால்கூட அவர்களுக்குத் தண்ணீர் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, இதுசம்பந்தமாக கேட்கப்பட்டிருக்கின்ற

அந்த 4 ஏரிகளுக்கும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, மதகுகளைச் சீரமைப்பது, கால்வாய்களைச் சீரமைப்பது போன்ற பணிகளை இந்த ஆண்டு அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 108, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

108--

தனி விற்பனைக்குழு அமைத்தல்

**52071--திருமதி. கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிதம்பரனார் மாவட்டத்திற்கென்று தனி விற்பனைக் குழு அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரனார் மாவட்டத்திற்கென்று தனியே விற்பனைக்குழு ஏற்படுத்துவது தொடர்பாக, விரிவாக ஆய்வு செய்து, தேவையை அறிந்து, நிதி நிலைகளையும் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 85 இலட்சம் டன் விவசாய விளை பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில், 5, 6 சதவீதம் மட்டுமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனைக்கு வருகின்றன. 8 சதவீதம் உற்பத்திப் பொருட்களாவது இந்த விற்பனைக் கூடங்களுக்கு வந்தால் நல்லது. 1994-95-ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையினுடைய மதிப்பீட்டுக் குழு சிதம்பரனார் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது அங்கே விவசாயிகளும், வியாபாரிகளும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள், சிதம்பரனார் மாவட்டத்திற்கு என்று தனி விற்பனைக் கூடம் அவசியம் வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்தார்கள், அந்த அடிப்படையிலே சிரம்பரனார் மாவட்டத்திற்கு என்று தனியே விற்பனைக் குழு அவசர அவசிய உணர்வோடு அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, இதே போன்று விற்பனைக் குழு இல்லாத இடங்களில், மற்ற மாவட்டங்களிலும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.